[1973 மார்ச் 20

அமைப்புப் பணியை விரைவிலே முடிக்க ஏற்பாடு செய்து, உடனடியாக அங்கே சுற்றுலா மாளிகைகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பாதை இல்லாததினல் சுற்றுலா மாளிகை கட்டப்படவில்லை என்று சொல்லவில்லை. இருக்கின்ற பாதை போக்குவரத்திற்கு—சுற்றுலாப் பயணிகள் சென்றுவர வசதி இல்லாமல் இருக்கிறது என்று சொன்னேன். பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் அங்கே பாதை அமைப்புப் பணிகளில் விரைவான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தால் அவர்கள் அதிலே கவனம் செலுத்துவார்கள். நல்ல பாதை வசதிகள் ஏற்பட்ட பின்னுல் அங்கே சுற்றுலா மாளிகை வரும்' என்பதில் ஐயப்பாடு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) 1973-ம் ஆண்டு, சிறு வழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு சிறு வழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.